திரு. மே. அ. இராசகுமார்: தலைவரவர்களே, அதுவரையில் தற்சமயம் குளித்தலையில் இருக்கிற இரண்டு கோர்ட்டுகளில் ஒன்றை மணப்பாறையில் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அதுகுறித்த செயற்குறிப்பு இல்லை. அது குறித்தும் உயர் நீதிமன்றத்தைக் கலந்தாலோசித்து, அவர்களுடைய பரிந்துரையைப் பெற்றுத்தான் முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனு தந்தால் பரிசீலிக்கப்படும்.

சோளிங்கர் நகரிலுள்ள மாவட்ட நடுவர் நீதிமன்றம்.

* வினா எண் 859—திரு சி. கோபால் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் சோளிங்கர் நகரில் உள்ள டிஸ்டிரிக்டு முன்சீப் கோர்ட்டிற்கு கிரிமினல் வழக்குகளும் நடைபெற First Class Magistrate power கொடுக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தற்போது இல்லை.

திரு. சி. கோபால் : தலைவரவர்களே, தற்போது இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே இருக்கிற சொந்தக் கட்டிடம் உள்ள கோர்ட்டுகளில் அழகான, வசதியுடைய சொந்தக் கட்டிடம் உள்ள கோர்ட் சோளிங்கர் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட். அங்கே பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பவ்வர் பெற்று, கிரிமினல் வழக்குகள் நடத்தவும் போதுமான வசதி இருக்கிறது. அதற்கு அனுமதி வழங்கலாம் என்று வடாற்காடு மாவட்டம், வேலூரிலிருந்து மாவட்ட நீதிபதியிடமிருந்தும் உயர்நீதி மன்றத்திலிருந்தும் அரசுக்கு கோரிக்கை எதுவும் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நீதிமன்றக் கட்டிடம் அழகாக இருக்கலாம். ஆனால் உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வரவில்லை ; பரிந்துரை வந்தால் அரசு பரிசீலிக்கும். அதைவிட 'இன்டகிரேஷன் ஆஃப் ஜுடிஷியரி' முறையை நடைமுறைப்படுத்தும்போது பல டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளுக்கு பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பவ்வர் அளிக்கப்பட்டு,

1981 எப்ரல் 24]

they w ll be called District Munsif-cum-Sub-Divisinal Magistrate Courts என்ற நிலை வரும். அந்த நிலை வரும்போது சோளிங்கர் பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. பாபு ஜனார்தனன் : தலைவரவர்களே, சிவில்-கம்—கிரிமினல் கோர்ட் வடாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்படுவதை வரவேற்கிறேன். ஏற்கனவே இருந்துவருகிற சிவில்-கம்-கிரிமினல் கோர்ட் வடாற்காடு மாவட்டத்திலிருந்து வேறு—இடத்திற்கு மாற்றப்படுவதாக ஒரு பீதி கிளப்பப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைச்சர் இல்லையென்று சொல்லியிருக்கிறார். மீண்டும் அந்த பீதி வந்திருக்கிறது. அது குறித்த விவரம் என்ன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; பேரவைத் தலைவரவர்களே, ஆனால் அத்தகைய செய்திக் குறிப்பு எதும் இல்லை, அத்தகைய ஒரு கருத்தினை உயர்நீதிமன்றம் கூட அரசுக்குச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொள்ளாச்சியிலுள்ள கூடுதல் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றம்.

*வினா எண் 660—திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியிலுள்ள அடிசனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வாரத்தில் 3 நாள் கிரிமினல் வழக்கும், 3 நாள் சிவில் வழக்குகளும் நடத்தப்படுகிறத :

(ஆ) ஆம் எனில் அதனால் சிவில் வழக்குகள் காலதாமதம் ஆவதை அரசு அறியுமா ?

(இ) தாமதத்தைத் தவிர்க்க அங்கு தனியாக முன்சீப் கோர்ட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) பொள்ளாச்சியில் கூடுதல் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றம் ஏதும் இல்லை. ஆனால் அங்குள்ள மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட குற்ற